// தனி கவனம் //

வேலூர் மாவட்ட முதன்மைக் கல்வி அலுவலரின் செயல்முறைகள்
ந க எண் 2995 / அ4 / 2022 நாள் 06 – 09–2022

பொருள் : தேர்வுகள் – வேலூர் மாவட்டம் – தமிழ் மொழி இலக்கியத் திறனறிவுத் தேர்வு அக்டோபர் 2022 – பள்ளி மாணவர்கள் விவரம் பதிவேற்றம் செய்ய தெரிவித்தமை – தற்போது அரசுத் தேர்வுகள் இணையதளத்தில் பதிவேற்றம் செய்யப்பட்ட மாணவர்களின் எண்ணிக்கை விவரம் கோருதல் சார்பு.

பார்வை : சென்னை அரசுத் தேர்வுகள் இயக்குநர் அவர்களின் கடித ந.க.எண் 101888/ டி (3) / 2022 நாள் -08–2022

.......

பார்வையில் காணும் சென்னை அரசுத் தேர்வுகள் இயக்குநர் அவர்களின் கடிதத்திற்கிணங்க நடைபெறவுள்ள அக்டோபர் 2022 தமிழ் மொழி இலக்கியத் திறனறிவுத் தேர்விற்கு அனைத்து வகை மேல்நிலை பள்ளிகளில் பயிலும் 11ம் வகுப்பு மாணவர்கள் விவரங்கள் 25–08–2022 முதல் 09–09–2022 வரை பதிவேற்றம் செய்ய கோரி தெரிவிக்கப்பட்டது. ஆனால் வேலூர் மாவட்டத்தில் மிக குறைந்த அளவில் மாணவர்களின் விவரங்கள் பதிவேற்றம் செய்யப்பட்டுள்ளது என தெரிவிக்கப்பட்டுள்ளது.

எனவே இன்றைய நிலவரப்படி (06–09–2022 இன்று மாலை 04.00 மணிக்குள்) தமிழ் மொழி இலக்கியத் திறனறிவுத் தேர்விற்கு விண்ணப்பித்த மாணவர்களின் எண்ணிக்கை விவரத்தினை வேலூர் மாவட்ட முதன்மைக் கல்வி அலுவலக இணைதளத்தில் உள்ளீடு செய்யுமாறு அனைத்து வகை அரசு / நகரவை / ஆதிதிராவிட நலம் / நிதியுதவி / மெட்ரிக் / CBSE / ICSE உட்பட மேல்நிலைப் பள்ளி தலைமைஆசிரியர்கள் மற்றும் மெட்ரிக் பள்ளி முதல்வர்கள் கேட்டுக்கொள்ளப்படுகிறார்கள்.

முதன்மைக் கல்வி அலுவலர்,
வேலூர்.

பெறுநர்
அனைத்து வகை (அரசு / நகரவை / ஆதிதிராவிட நலம் / நிதியுதவி / மெட்ரிக் / CBSE / ICSE உட்பட) மேல்நிலைப் பள்ளி தலைமைஆசிரியர்கள் மற்றும் மெட்ரிக் பள்ளி முதல்வர்கள்

நகல்
வேலூர் மாவட்டக் கல்வி அலுவலர் அவர்களுக்கு தகவலுக்காகவும் தொடர் நடவடிக்கைக்காகவும் அனுப்பலாகிறது.